## 2.87 கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு தொழில் நுட்பப் பிரிவுக்கு மூன்று ஆண்டுகளுக்கு 6 பணியிடங்களை ஏற்படுத்துதல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (நிலை) எண்.26 நாள் : 6.3.2007

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 263, ஊரக வளர்ச்சித் துறை நாள் 27.12.96
2. அரசாணை (நிலை) எண் 15, ஊரக வளர்ச்சித் துறை நாள் 21.1.04
3. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண் 1738/04/K.1, நாள் 20.4.04, 17.6.04 மற்றும் 15.11.05..
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண். 95420/03/H2, நாள் 9.6.04.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண். 95420/03/Pen–5, நாள் 22.9.04 மற்றும் 17.10.06.

**ஆணை**

படிக்கப்பட்ட 1 காணும் ஆணையில் ஊரக வளர்ச்சித் துறையின் தொழில் நுட்பப் பிரிவுக்காக 602 தொழில்நுட்பப் பணியிடங்களையும், 81 தொழில்நுட்பம் சாரா பணியிடங்களையும் ஏற்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கீழ்க்கண்ட தொழில் நுட்பப்பணியிடங்கள் ஏற்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) | 1 |
| உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) | 1 |
| முதுநிலை வரைவு அலுவலர் | 1 |
| இளநிலை வரைவு அலுவலர் | 2 |
| ஓட்டுநர் | 1 |

படிக்கப்பட்ட 2ல் காணும் ஆணையில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு புதிய பல்வேறு பணியிடங்கள் தோற்றுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்புதியதாக ஏற்படுத்தப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு தொழில் நுட்பப்பிரிவுக்கு மேற்குறிப்பிட்ட பணியிடங்கள் ஏற்படுத்தப்பட வில்லை எனவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தொழில் நுட்பப்பிரிவுக்கான பணியிடங்களை அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு எற்படுத்த படிக்கப்பட்ட 3ல் காணும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை படிக்கப்பட்ட 4ல் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) | 10000–325–15200 | 1 |
| 2 | உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) | 8000–275–13500 | 1 |
| 3 | முதுநிலை வரைவு அலுவலர் | 6500–200–11100 | 1 |
| 4 | இளநிலை வரைவு அலுவலர் | 4500—125–7000 | 2 |
| 5 | ஓட்டுநர் | 3200—85–4900 | 1 |
| | | மொத்தம் | 6 |

2. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்பு கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தொழில் நுட்பப்பிரிவுக்கு அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு கீழ்க்கண்ட பணியிடங்களை ஏற்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) | 10000–325–15200 | 1 |
| 2 | உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) | 8000–275–13500 | 1 |
| 3 | முதுநிலை வரைவு அலுவலர் | 6500–200–11100 | 1 |
| 4 | இளநிலை வரைவு அலுவலர் | 4500—125–7000 | 2 |
| 5 | ஓட்டுநர் | 3200—85–4900 | 1 |
| | | மொத்தம் | 6 |

மேற்காணும் பணியிடங்களில் ஊர்தி ஓட்டுநர் பணியிடத்தினை மட்டும் தமிழ்நாடு முன்னாள் இராணுவக் கழகத்தின் (TEXCO) மூலம் நிரப்பப்படவேண்டும் என ஆணையிடப்படுகிறது.

3. இப்பணியிடங்களுக்கு ஆகும் செலவினமானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

"2515.00 – Other Rural Development Programmes -001- Direction and Administration – I Non Plan AC. Development Staff in Collectorate 01, Salaries (DPC 251500-001AC 0008)

4. இப்பணியிடத்திற்காகும் வருட தொடரும் செலவினம் ரூ. 11,52,864/– (ரூபாய் பதினோறு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்தி நான்கு மட்டும்) மற்றும் தொடரா செலவினமாகிய ரூ. 1,73,220/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து இருநூற்று இருபது மட்டும்) ஆக மொத்தம் ரூ. 13,26,084/– (ரூபாய் பதிமூன்று லட்சத்து இருப்பத்தாராயிரத்து எண்பத்து நான்கு ) மட்டும் அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

5. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா. எண். 11601/நிதி(ஊவ), நாள் 1.3.2007 மற்றும் அ.சா.கு.எண் 13833/ நிதி(மை.ம.ஆ.பி) நாள் 1.3.2007–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்